# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

***2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதிய***

## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2023.11.10 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)*

***காலவிதிப்பு (திருத்தம்)***

***(68 ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.*

***விலை: ரூபா 6.00*** ***தபாற்செலவு : ரூபா 50.00***

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2 :*** இவ்வாசகம் (68 ஆம் அத்தியாயமான காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஏதேனும் ஆதனத்தின் ஏதேனும் ஈட்டின்மீது ஏதேனும் வருமதியான தொகையினை மீளப்பெறுவதற்கான வழக்கை அல்லது பணக்கொடுப்பனவிற்கான ஏதேனும் முறியை கடன்பட்டோருக்கு வழங்கிய அறிவித்தல் திகதியிலிருந்து பத்து ஆண்டுகளுக்குப்பின்னர் விதித்துரைக்கப்படுதல் வேண்டும் என்றவகையில் ஏற்பாடுசெய்வதற்கானதாகும்.

*காலவிதிப்பு (திருத்தம்)*

*ச.வ.ஒ. 63/2017*

**(68 ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளைச்சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

**1.** (1) இச்சட்டம் 2023 ஆம் ஆண்டின் ..... ஆம் இலக்க, காலவிதிப்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகள் தவிர்ந்த, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள் பாராளுமன்றத்தில் எத்தேதியன்று சட்டமூலம் சட்டமாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*68 ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**2.** (68 ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவானது, "அத்தகைய காலம் முடிவுறுவதிலிருந்து பத்து ஆண்டுகளினுள்" என்பதிலிருந்து அப்பிரிவின் முடிவுவரை உள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "கடன்பட்டோருக்கு அறிவித்தல் வழங்கிய தேதியிலிருந்து பத்து ஆண்டுகளினுள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

PL 014097 - 475 (2023/10)

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.